SET-4

**Series ЄABA€/C**

Q.P. Code **6**

Roll No.

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **4** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **22** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **4** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **22** questions.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 2 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 40*

*Time allowed : 2 hours* | *Maximum Marks : 40*

**I.** பின்வரும் இலக்கண வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்குக்** குறுகிய விடை எழுதுக : *3×2=6*

**1.** இடைவெளிவிட்டும் விடாமலும் எழுதுவதால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

**2.** மெய்ப்படிமம் என்றால் என்ன ? எடுத்துக் காட்டுத் தருக.

**3.** ஒரு காட்சியைப் படிமப்படுத்திய கவிதையைக் கூறி விளக்குக.

**4.** பொருள் மயக்கம் ஏற்படாதவாறு தொடர் அமைக்க நினைவில் கொள்ள வேண்டியவற்றுள் மூன்றனை எழுதுக.

**5.** வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும் - விளக்குக.

**II.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்குக்** குறுகிய விடை எழுதுக : *2×2=4*

**6.** எதிர்பாராத விருந்தினர்கள் எவர் ?

**7.** குகன் எப்படிப்பட்டவன் ?

**8.** மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள் யாவை ?

**9.** அகநானூற்றுப் பாடலில் காணப்படும் உள்ளுறை யாது ?

**III.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்குக்** சுருக்கமான விடை எழுதுக : *2×3=6*

**10.** கந்தகோட்டத்து இறைவளிடம் இராமலிங்க அடிகளார் யாது வேண்டுகிறார் ?

**11.** பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையை விளக்குக.

**12.** வெஃகாமை குறித்துக் குறள் கூறுவன யாவை ?

**13.** சடாயு உயிர் நீத்த படலத்தில் சடாயுக்கு இராமன் செய்த இறுதிச் சடங்கு எவ்வாறு அமைந்தது ?

**IV.** பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்குக்** விரிவான விடை எழுதுக : *2×5=10*

**14.** தாய் வழிக் குடும்பம் குறித்து விளக்குக.

**15.** விரிந்த குடும்பம் எவ்வாறு அமைந்திருந்தது ?

**16.** சென்னையின் போக்குவரத்துப் பற்றிய செய்திகளை விளக்குக.

**17.** சென்னை நகரம் உருவாகிய வரலாற்றை எழுதுக.

**V.** பின்வரும் துணைப்பாடக் கட்டுரைகளுள் **ஒன்று** குறித்து விரிவாக எழுதுக : *1×5=5*

**18.** உரிமைத்தாகம்

**19.** தலைக்குளம்

**VI.**

**20.** பின்வரும் உரைநடைப் பகுதியை **மூன்றில் ஒரு பங்காகச்** சுருக்கி வரைக : *4*

சங்க காலத்தில் அரசனுக்குத் துணையாய்ப் புலவர்கள் செயல்பட்டு வந்தனர். நாட்டை ஆளும் அரசனின் செயல்பாடுகளில் குற்றம் தென்பட்டால், குற்றங்களைச் சுட்டிக் காட்டித் திருத்தும் பெரும்பொறுப்பும் புலவர்க்கு

இருந்தது. அத்தகைய புவைர்களின் அறிவுரைகளைச் சிரமேற் கொண்டு செயல்படும் அரசர்கள். புலவர்கள் விரும்பும் பரிசை அள்ளிக் கொடுத்து மகிழ்வித்தல் சங்ககால மரபு. இதனால் புலவர்கள் வறுமை நீங்கிச் செழுமை கண்டனர்.

அரசர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற வேண்டிய சூழலில் புலவர்கள் இருந்தாலும் பரிசுக்காக மட்டும் அரசரைப் பாடிப் பரிசில் கேட்டு நிற்கும் வழக்கம் ஒரு போதும் இருந்ததில்லை. மன்னரைப் பாடிப் பரிசு பெற வந்த புலவர்கள் தங்களுக்கு அரசவையில் உரிய மரியாதை கிடைக்காத நிலையில் தன் தன்மான உணர்வைக் காத்துக் கொள்ள பரிசில் பெறாமல் திரும்பி விடுவர் என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

**VII.** **ஒன்று** பறறிக் கடிதம் எழுதுக : *1×5=5*

**21.** நீ படித்து மகிழ்ந்த புதினம் (நாவல்) பற்றி உன் நண்பனுக்கு மடல் எழுதுக.

**(அல்லது)**

**22.** உன் பள்ளி நூலகத்திற்கு நூல்கள் வேண்டி அன்பு பதிப்பகத்தார்க்குக் கடிதம் வரைக.

(இரண்டிலும் உன் முகவரி : இ.இராமு/இ.லதா, 13-வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-29)